Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.
சனி வெளியீடு.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0 }

மாலை 19 } ஈரோடு 19-1-1946 தையீ 6வ { மலர் 15

## வைதிகப் பார்ப்பானுக்கும், கோயில்பிரவேசப் பார்ப்பானுக்கும்

## சம்பாஷணை

★

வைதிகப்பார்ப்பனர்:- என்ன சாஸ்திரிகளே! நீங்கள்கூட பறைப்பசங்களைக் கோயிலுக்குள் விடுவது சரியென்று சொல்லுகிறீரே! நீரே இப்படிச்சொல்ல ஆரம்பித்துவிட்டால் பிறகு நம்ம சாஸ்திரங்கள் என்ன ஆவது?

கோயில் பிரவேச பார்ப்பனர்:-ஆமாம்! என்ன பண்றது! இனி சாஸ்திரத்திரத்தையும் மதத்தையம் சொல்லி அந்தப் பசங்களின் சுதந்தரத்தைத்தடுக்க முடியாது. அந்தப்பசங்களும் நம்ம சாஸ்திரத்தில் என்ன சொல்லுகிறது என்று தெரிந்துகொண்டார்க்ள்: அவர்கள் எதாவது கேட்கும்போது நாம் சாஸ்திரமென்றோ மதமென்றோ சொன்னால், உடனே அவர்கள் நீங்கள் அவைகளின்படி நடக்கிறீர்களா? என்று கேட்டு விடுகிறார்கள்? அதற்கு நம்மால் சரியான பதில் சொல்லமுடியவில்லை. ஆகையால் அவாள் சொல்றதை ஆமோதித்தால்தான் நம்மையும் நாலுமனுஷான் நல்லவன் என்று சொல்லுவான்கள் போலிருக்கிறது?

வை—பா. இதற்காகவா நாம் பயந்துவிடுகிறது? பிறகு நம்ம ஜாதிக்கே ஆபத்து வந்துவிடுமே. சாஸ்திரம், பிராமணாளாகிய நம்மசௌகரியத்திற்கு எற்படுத்தியதுதானே! சாஸ்திரத்திற்கே அதிகாரிகள் நாம்தானே! நாம் அதன்படி நடந்தால் என்ன? நடக்காவிட்டால் என்ன? நம்மைக்கேட்க இந்தப் பசங்களுக்கு என்ன அதிகாரமுண்டு?

கோ. பி. பா:- சரிதாங்காணும். நீர் சொல்றதை யார் காதுகொடுத்துக் கேட்கிறார்கள். சாஸ்திரத்தின்படி நடந்தால்தானே நீ பார்ப்பான்? நீ, பார்ப்பானுக்குச் சொல்லப்பட்ட எல்லாக் கர்மாக்கலையும் செய்கிறாயா? இங்கிலீஷ் படித்து உத்தியோகம் பண்ணும்படி உங்கள் சாஸ்திரம் சொல்லுகிறதா? காப்பி கிளப்பு வைத்திருக்கிறவனையும், கள்குடிப்பவனையும், கப்பலேறிச் செல்பவனையும், மிலேச்சர்களாகிய ஆங்கிலேயர்களுடன் கைகுலுக்குகிறவனையும் பார்ப்பான் என்று சொல்ல உங்கள் சாஸ்திரம் இடங்கொடுக்கிறதா? இப்படிப்பட்டவர்களையெல்லாம் பார்ப்பனர்கள் என்று நீங்கள் ஒப்புக்கொண்டு அவர்களுக்கு எல்லாவிடங்களிலும் சமத்துவம் வழங்கும்போது நாங்களும் என் சமத்துவம் பெறக்கூடாது? என்று கேட்கறார்களே இதற்கு என்ன சொல்வது?

வை. பா:- இதற்குத்தானா சமாதானம் சொல்லமுடியாது? காயத்திரி ஜெபம் பண்ணும் சுதந்தரம் பார்ப்பானுக்குத்தான் உண்டு. ஆகையால் அவன் எந்தப் பாபத்தைச் செய்தாலும் காயத்திரி ஜெபம் பண்ணி அதை நீக்கிக்கொள்ளுகிறான். அதனால் அவன் சுத்த பார்ப்பானாகி விடுகிறான் என்ற சமாதானத்தைச் சொல்லுமே.

கோ. பி. பா:- சரி, நீர் சொல்ற சமாதானத்தையே சொல்லுவதாக வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது, அந்தக் காயத்திரி ஜெபத்தை எங்களுக்கும் கற்றுக்கொடுங்களேன்; நாங்களும் அதை ஜெபித்துக்கொண்டு பார்ப்பானாகி விடுகிறோம்; என்று சொன்னால் என்ன சொல்லுகிறது?

வை. பா:- காயத்திரி ஜெபத்தைச் சூத்திராளுக்கும், பஞ்சமாளுக்கும் கற்றுக்கொடுக்கச் சாஸ்திரமில்லை, என்று சொல்லிவிட்டால் போகிறது.

கோ-பி-பா:- ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள், எல்லோருக்கும் காயத்திரி மந்திரத்தைக் கற்றுக்கொடுத்துப் பார்ப்பானாக்கி விடுகிறார்களே; அந்த மாதிரி நீங்களும் செய்யுங்களேன்; என்று சொன்னால் என்ன சொல்கிறது?

வை-பா:- ஆரிய சமாஜத்தார் செய்வது தப்பு. அவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவாள் அல்ல; அவாள் முக்கால் நாஸ்திகாள்; என்று சொல்லிவிடுவதுதான் நல்லது.

கோ-பி-பா:- சரி நீர் சொல்ற சமாதானத்தைச்சொன்னால் எல்லாரும் கேட்பார்களா? சுயமரியாதைக்காரர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சமாதானம் சொல்ல முடியாமலிருக்கிறதே. அவர்கள் ஒரேபடியாக, "சாஸ்திரங்களெல்லாம் பொய், அவைகள் பார்ப்பனர்களின் வயிற்றுப்பிழைப்புக்காக எற்பட்டவை. மனிதர்களுக்குள் சிறிதும் வித்தியாசமே இல்லை. எல்லா மனிதர்களுக்கும் எல்லாச் சுதந்திரங்களும் உண்டு. உலகத்தில் உள்ள வித்தியாசங்களெல்லாம் மனிதனால் ஏற்பட்டவைதான், அதுவும் சுயநலத்தால் ஏற்பட்டவைகள்" என்றுகூறி சமதர்ம வாதம் புரிகிறார்களே அவர்களை எப்படிச் சமாதானப் படுத்த முடியும்?

வை-பா:—அடே அப்பா! சுயமரியாதைக்காரர்களா? அவர்கள் பெயரைக் கேட்டவுடனேயே எனது வயிறு கலங்குகிறது. எல்லாம் அவர்களால் வந்த வினைதான், அவர்கள் சொல்லும் வாதங்களுக்கு ஒன்றும் சமாதானம் கூற முடியாதுதான். அவர்கள் கொடுத்த சாட்டையால் தான், நம்ம ராஜகோபாலாச்சாரிகூட இப்பொழுது கோயில் பிரவேசத்தைப்பற்றி அதிதீவிரமாகப் பிரசாரம் பண்ணுகிறார். அவர்களுக்குக் கூறவேண்டிய சமாதானம் ஒன்றுதான். நீங்கள் நாஸ்திகர்கள், உங்களுக்கு ஒன்றும் சொல்ல முடியாது என்று சொல்லிவிட வேண்டியதுதான். மற்றவர்களிடமும், அவர்களைப்பற்றி "நாஸ்திகர்கள், மதத்துரோகிகள்" என்று கூறிவிட்டால் சரியாகப் போய்விடும். ஆகையால் அதைப் பற்றிக் கவலை வேண்டாம்.

கோ-பி-பா:—ஆமாம்! இவ்வளவு சிரமந்தான் நமக்கு எதற்கு? நம்மால்தான் சாஸ்திரத்தின்படி நடக்க முடியவில்லை. எதோ சும்மாவாவது சாஸ்திரம்! சாஸ்திரம்! என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் சொல்லுகிறபடி கோயில்

களில் ஆதிதிராவிடர்கள் முதலான தாழ்த்தப்பட்டவர்களை யெல்லாம் விட்டு விட்டால் தான் என்ன? சாஸ்திரம் போனால் போகிறது? இனிமேல்தானா சாஸ்திரம் போகவேண்டும். அதுதான் முன்னமே போய் விட்டதே!

வை-பா:—அட பைத்தியமே! உமக்குச் சிறிதும் விஷயம் புரியவில்லையே. ஏதோ; சாஸ்திரம், மதம், என்று சொல்லிக்கொண்டிருப்பதனால்தான் கொஞ்சமாவது நமக்கு மதிப்பிருக்கிறது. நம்மை ஒன்றுந்தெரியாத பாமரமக்களாவது உயர்ந்த ஜாதியென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால் அதுவும் போய்விடுமே! என்ன செய்கிறது?

கோ-பி-பா:— இப்பொழுதுதான் நமக்கு என்ன மதிப்பிருக்கிறது? நம்மை எவன் மதிக்கிறான்; இனிமேல்தானா நம்முடைய மதிப்புக் கெடவேண்டும்? யார் நமது வார்த்தையைக் கேட்கப் போகிறார்கள்?

வை-பா:—அப்படியா? எத்தனையோ சோணகிரிகள் இல்லையா? கும்பகோணத்தில் ராவ்பகதூர் முத்துக்குமாரசாமி செட்டியார் போன்றவர்கள் இல்லையா? அவர்களெல்லாம் நமக்குக் கௌரவம் கொடுப்பதால்தானே நம்ம சாஸ்திரத்தையும் நம்புகிறார்கள்? அவர்கள் கோயில் பிரவேசத்திற்கு எதிராக இல்லையா? அவர்களைப்போல இன்னும் பத்து பணக்காரச் சூத்திராள் நம்மை ஆதரித்தால் போதாதா?

கோ-பி-பா:—ஓ கோ! கோ! இப்பொழுதுதான் விஷயம் புரிந்தது! நாம் சாஸ்திரத்தின்படி நடக்காவிட்டாலும், நமக்கு அதில் நம்பிக்கையில்லாவிட்டாலும், நாம் சாஸ்திரங்களைத் தெய்வீகமானவைகள் என்றும், அவைகளை மீறி நடந்தால், பாவம், மதம் போய் விடும், தோஷம் சம்பவிக்கும் என்று பிரசாரம் பண்ணுவதனால் நமக்கு லாபமுண்டு என்று தெரிந்து கொண்டேன். இம்மாதிரி பிரசாரம் பண்ணினால்தான், ஒன்றுந்தெரியாத பார்ப்பனரல்லாதார் நம்மை மதிப்பார்கள், நாமும் அவர்களை மிரட்டி மதத்தின் பேராலும், சாஸ்திரங்களின் பேராலும் காசுபறிக்கலாம் என்று சொல்லுகிறீர், சரி. இனி நானும் கோயில் பிரவேசப் பேச்சை விட்டு விடுகிறேன். எதிர்ப்பிரசாரம் ஆரம்பித்து விடுகிறேன்.

வை-பா:—சந்தோஷம், அதுதான்சரி, இப்படிச் செய்தால்தான், சுயமரியாதைக்காரர்கள் தேசாதிகாரிகளாக வரும் வரையிலாவது நம்முடைய சூழ்ச்சிகள் நிலைத்திருக்கும். இன்றேல் பிராமணீயமே அழிந்து போகும்.

---

சாத்தூர் சக்தி (திறமைசாலி) கால் பந்தாட்ட கோஷ்டி 3-வது ஆண்டுவிழா 9-12-45ல் டிப்டி இன்ஸ்பெக்டர் தோழர் ஒச்சாத் தேவர் பி. ஏ. எல். டி. தலைமையில் நடைபெற்றது.

## சிவகங்கையில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்

8-1-46 காலை 10 மணிக்கு பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் சிவகங்கை முசாபரி பங்களாவில் காரில் வந்திறங்கினார். மிக அழகாக அணி வகுக்கப்பட்டு இரு புறமும் வரிசையாக நின்றிருந்த 100 கறுப்புச்சட்டைத் தொண்டர்கள் பெரியார் வாழ்க, திராவிடம் வாழ்க, திராவிடநாடு திராவிடருக்கே என்னும் வாழ்த்தொலிகள் கூறிப் பெரியாரை மகிழ்ச்சியோடு வரவேற்றனர். அன்று தலைவர்களை உள்ளூர் பிரமுகர்கள் பலரும், முக்கிய அதிகாரிகள் பலரும், காங்கரஸ்காரர்களில் சில முக்கியமானவர்களும் வந்து பார்த்து பல முக்கிய விஷயங்களைப்பற்றிப் பேசி சென்றார்கள்.

அன்று மாலை 6½ மணிக்கு சிவகங்கை தோழர் வக்கீல் கற்பூர சுந்தரபாண்டியன் அவர்கள் சீரிய தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெரியார் அவர்கள் திராவிடநாட்டுப் பிரச்சினையும் தற்கால அரசியல் நிலைமையும்பற்றி மிகவிளக்கமாக 2மணிநேரத்திற்கு மேலாகப்பேசினார். பல சங்கங்கள் சார்பில் கறுப்புத்துணி மாலைகளும் மலர் மாலைகளும் பெரியார் அவர்கட்கு அணிவிக்கப்பட்டது. பின் தலைவர்கள் முடிவுரை கூறியபின் வக்கீல் ராஜசேகரன் பி. ஏ., பி. எல், அவர்கள் வந்திருந்தோர் அனைவருக்கும் நன்றியும் வணக்கமும் கூறி கூட்டத்தை இனிது முடித்தார்.

குறிப்பு:: கூட்டத்திற்கு பல அதிகாரிகளும், பார்ப்பன ஜட்ஜுகளும், வக்கீல்களும், முன்சீப்புகளும் இன்னும் மற்ற முக்கியஸ்தர்களும் வந்திருந்து அமைதியாக இருந்து சொற்பொழிவைக்கேட்டு குற்றம் சொல்ல முடியாதபடி மகிழ்ச்சியோடு சென்றார்கள். கூட்டத்தில் ஒலி பெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. சுமார் 5000 மக்களுக்குமேல் குழுமி இருந்தார்கள்.

### சாத்தூரில் பொதுக்கூட்டம்

9-1-46 மாலை 7 மணிக்கு புதுப்பட்டி ஷம்சுதீன் சாயபு அவர்கள் தலைமையில் சாத்தூரில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வன்னி முத்து கோயில்பட்டி ஆசைத்தம்பி முதலியோர்கள் பேசிய பின் பெரியார் அவர்கள் நீண்ட கைதட்டலுக்குப்பின் எழுந்து திராவிட கழகத்தின் நோக்கத்தைப்பற்றி சேலம் மாநாட்டுத் தீர்மானத்தைப்பற்றியும் 2 மணி நேரம்வரை பேசினார்கள். பின் தலைவர் முடிவுரை கூற தோழர் ராஜமணி அவர்கள் வந்தனம் கூறக் கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது முடிந்தது.

### ஸ்ரீவில்லிப்புத்தூரில் திராவிடர் கழக பொதுக்கூட்டம்

10-1-46 மாலை 6½ மணிக்கு ஸ்ரீவில்லிப்புத்தூரில் திராவிடர் கழகப் பொதுக் கூட்டம் கிழக்கு வீதி டாக்டர் நாயக் சதுக்கத்தில் அவ்வூர் திராவிடர் கழகத் தலைவர் சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெரியாரவர்கள் "திராவிடநாடும் தற்கால நிலைமையும்" என்னும் பொருள்பற்றி அரியதோர் விரிவுரை நிகழ்த்தினார். கூட்டத்திற்கு அவ்வூர் அர்ச்சகர்கள் முதல் அதிகாரிகள் ஈறாக பல முக்கிய தோழர்களும் காங்கரஸ் அபிமானிகளும் வந்திருந்தார்கள். கூட்டம் மிக்க அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றது. சுமார் 3000 மக்களுக்கு மேலாகவே கூடி இருந்தனர். ஒலி பெருக்கியும் அமைக்கப்பட்டிருந்தது. கூட்டம் சிறப்புடன் தலைவர் முடிவுரைக்குப்பின்னும் தோழர் ஆதிநாராயணன் அவர்கள் நன்றி கூறலுடனும் இனிது முடிந்தது.

## பிறப்பு

தோழர் பி. என். இராமானுஜம் அவர்கள் மனைவியாருக்கு 6-1-46ல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

தாரமங்கலம் தோழர் டி. எஸ். வேலாயுதம் அவர்கள் மனைவியார் மீனாட்சியம்மையாருக்கு 7-12-45ல் பிறந்த குழந்தைக்கு "மங்கையர்க்கரசி" என்று பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'முடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடை அனுப்பப்பட்டது.

---

## திருமணங்கள்

வத்தலக்குண்டில் 6-12-45ல் தோழர் மலையாண்டி நாடார் தலைமையில் திருமணம் செய்துகொண்ட தோழர்கள் பஞ்சவர்ணம்—இலட்சுமி திருமணத்தின் நினைவாக குடியரசுக்கு 2-ரூபாய் நன்கொடையளித்துள்ளனர்.

o o

திருச்சி தமிழ்நாடு வித்வான் விவாக சங்க சார்பில் 10-12-45ல் வழக்கறிஞர் கே. எஸ். இராமானுசம் பி. ஏ. பி. எல்., தலைமையில் தோழர்கள் கிருஷ்ணப்பா-தனபாக்கியத்தம்மாள் பதிவுமணம் நடைபெற்றதை முன்னிட்டு குடி அரசுக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

o o

நிலக்கோட்டையில் 31-2-45ல் நடைபெற்ற தோழர்கள் சின்னதுரை-அடைக்கலம்மாள், பாண்டியன்—கற்பகசுந்தரி, வாழ்க்கை ஒப்பந்தங்களை முன்னிட்டு குடி அரசுக்கு முறையே 1-ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

### 'ஒழிக'

சென்னை நுங்கம்பாக்கத்தில் சில மாணவத்தோழர்கள் பொங்கலன்று கம்பராமாயண பகுதிகளையும் புராண படங்களையும் தீயிலிட்டு பொசுக்கி 'கம்பராமாயணம் ஒழிக' என்ற கூச்சலுடன் கொண்டாடினார்கள்.

# மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

மமுசாபுரம்

5-1-46 முதல் காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய ஊர்கள் முடிந்து 11-1-46 காலை 11-மணிக்கு பெரியாரவர்களும், மணி, மற்றும் பலரும் ஸ்ரீவல்லிப்புத்தூரிலிருந்து மமுசர்புரம் வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து வாத்தியங்களும், வாழ்த்தொலிகளும் முழங்க "பெரியார்" ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலம் முடிவடைந்ததும், பக்கத்து கிராமங்களிலிருந்து வந்திருந்த ஏராளமான இயக்கத் தோழர்களும் ராஜபாளையம் தோழர் ஆர். பி. ஆதிநாராயணன் முதலியவர்களும், வந்து பேசிக்கொண்டிருந்தனர். மாலை 6-மணிக்கு மற்றதெருக்களின் வழியாக ஒரு மாபெரும் ஊர்வலம் சென்றது. வழிநெடுக கறுப்புத்துணி மாலைகள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. பின் மாலை 7-மணிக்குப் பொதுக்கூட்டம் அவ்வூர் உயர்தர ஆரம்பப் பாடசாலையின் மானேஜர் பாண்டிய நாடார் தலைமையில் ஆரம்பமாயிற்று. அக்கூட்டத்தில் சுமார் 2½ மணிநேரம் உணர்ச்சிமிக்க சொற்பொழிவு நிகழ்த்தினார் பெரியார். பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. வந்திருந்த எல்லோருக்கும் அறுசுவை உணவு அளிக்கப்பட்டது.

அருப்புக்கோட்டை

பெரியாரவர்களும், மணி அம்மையாரும் மற்றும் பலரும், மமுசாபுரத்திலிருந்து ஸ்ரீவில்லிப்புத்தூர் வழியாக விருதுநகர் வந்து சேர்ந்தார்கள். புகைவண்டி நிலையத்தில் அருப்புக்கோட்டைத் தோழர்களான, எஸ். எஸ். பழனிச்சாமி, சிவஷண்முகசுந்தரம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, நாடகமணி, எம். ஆர். ராதா முதலியவர்கள் வரவேற்றனர். பின் தனியாக அமர்த்தப்பட்ட காரில், பெரியாரும், மற்றவர்களும், தோழர் "ராதா" நடிக்கும் நாடகக் கொட்டகைக்கு அழைத்து வரப்பட்டு ராதா அவர்களால் அளிக்கப்பட்ட சிற்றுண்டியருந்தியபின் தனிக்கார்களில் எல்லோரும் அருப்புக்கோட்டை வந்து சேர்ந்தனர்.

மாலை 4-மணிக்கு அருப்புக்கோட்டை பஞ்சாயத்து போர்டின் சார்பில் பெரியாரவர்கட்கு ஒரு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

பின் அங்கேயே விஸ்வகர்ம ஆபரணத் தொழிலாளர் சங்கத்தார், தியாகராய வாலிப சங்கத்தார், தேவாங்க சீர்திருத்த சங்கத்தார், சாலியர் மகாஜன சீர்திருத்த இளைஞர்கள், சாலியர் பிரசாரப்பயிற்சிக் கழகத்தார், சலவைத் தொழிலாளர் சங்கத்தார், திராவிட கழகத்தார், மருத்துவ சங்கத்தார் முதலியவர்களால் மலர் மாலைகளும், கறுப்பு மாலைகளும், 10க்கு அதிகமான வரவேற்பு வாழ்த்திதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

பின்பு பிரபல வியாபாரி தோழர் கல்யாணிசெட்டியார் வீட்டில் பெரியாருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. பின் தோழர் எஸ். எஸ். கருப்பையா அவர்கள் இல்லத்தில் பெரியாரவர்கட்கும், மற்றும் சுமார் 200க்கு மேற்பட்ட தோழர்கட்கும், தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

மாலை 6 மணிக்குக் கடைத்தெருவில் 6000க்கு மேற்பட்ட ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் சு. சு. முத்துநாடார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது, தலைவர் முகவுரைக்குமுன் திராவிட மறுமலர்ச்சி நாடகசபைத் தோழர்கள் திராவிடநாட்டுப் பண் பாடினர். பின்பு பெரியாரவர்கள் நீண்ட கைதட்டுதலுக்கிடையே எழுந்து சுமார் 3-மணிநேரம் திராவிடர் இனம், நாடு, பிரிவினை முதலியவைகளை விளக்கி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

மதுரையில் மாபெருங்கூட்டம்

பெரியாரவர்கள் அன்றிரவே புறப்பட்டு மறுநாள் காலை 10-க்கு மதுரை வந்து சேர்ந்தனர். மதுரை ரயில்வே ஸ்டேஷனில் 1000க்கணக்கான தோழர்கள் வரவேற்றனர். கறுப்புச் சட்டைத் தொண்டர் படையினர் 200 பேர்கள் வரை அணி வகுத்து நின்று வரவேற்ற காட்சி மிக அழகாய் இருந்தது. பின்பு பெரியார் அவர்கள் தோழர் [illegible]குளி அவர்கள் வீட்டில் வந்து இறங்கி சிற்றுண்டி அருந்தியபின் சந்தைப்பேட்டை ரோட்டில் நடைபெற்ற "அண்ணாத்துரை வாசகசாலை" ஆண்டுவிழாவிலும் தங்கராஜ் தலைமையில் திராவிடர் கழகக் கிளைத் திறப்புவிழாவிலும் சுமார் 1½ மணிநேரம் திராவிடத்தைப்பற்றிய விளக்கவுரையும், தொண்டர்களின் கடமை பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

பின் ஆசைத்தம்பி, மதியழகன், நீலநாராயணன் முதலியவர்கள் பேசியபின் விழா இனிது முடிவுற்றது.

மாலை 6-மணிக்குக் கீழமார்க்கட் மைதானத்தில் 15000 மக்கள் கூடியிருந்த பெரும்பொதுக்கூட்டத்திற்குத் திருச்சி தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்கள் தலைமை வகித்து சுமார் 1மணிநேரம் சொற்பொழிவாற்றியபின் பெரியாரவர்கள் வாழ்த்தொலிக்கிடையே எழுந்து சுமார் 2½மணிநேரம் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின் தலைவர் முடிவுரைகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

பெரியகுளம்

14-1-46 காலை 8½ மணிக்குத் தனிக்காரில் பெரியார் அவர்களும், மற்றவர்களும் பெரியகுளம் புறப்பட்டுச் சென்றனர். அங்கு நாயுடு காரு வீட்டில் பிரபல விருந்து நடந்தது. அன்று மாலை 4-மணிக்கு ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு வழிநெடுக மாலைகள் அணிய வாழ்த்தொலிகளுடன் ஆற்றங்கரையை அடைந்தது. ஊர்வலம் வருவதற்கு முன்பே ஆயிரக்கணக்கான மக்கள் காத்திருந்தனர். பின்பு பெரியகுளம் நகராண்மைக் கழகத்தலைவர் கே. பி. நாயுடு பி. ஏ. அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. ஊர்வலம் வரும் வழியில் பெரியகுளம் முஸ்லீம் மக்களின்

சார்பில் பள்ளிவாசல்முன்பு அலங்காரம்செய்திருந்த பந்தலில் பெரியாரவர்கட்கு வரவேற்புப்பத்திரம் அளிக்கப்பட்டது. பின் கூட்டத்தில் மாணவர்களாலும், மற்றும் பலராலும் வாழ்த்திதழ்களும், மாலைகளும் அளிக்கப்பட்டன. தலைவர் முகவுரைக்குபின் பெரியார் சுமார் 3மணி நேரம் "நாம் ஏன் தேர்தலில் கலந்து கொள்ளக் கூடாது" திராவிடநாட்டுப் பிரிவினை முதலியவைபற்றி விளக்கமாகப் பேசிய பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

மறுநாள் காலை பெரியாராவர்கள் தங்கி இருந்த இல்லத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டது.

## நிலக்கோட்டை

பின் தனிக்காரில் புறப்பட்டு அன்று 11மணிக்கு நிலைக்கோட்டைவந்து சேர்ந்தார். நிலக்கோட்டை வந்ததும் கறுப்புச் சட்டைத் தொண்டர்படை அணிவகுப்புடன் ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு திராவிடர் கழகத்தை அடைந்தது. அன்று மாலை 6 மணிக்கு பெருமாள் கோயில் மைதானத்தில் தோழர் பிச்சை வாத்தியார் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பெரியாரவர்கள் சுமார் 2 மணி நேரம் எல்லா விஷயங்களையும் விளக்கிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

நிலக்கோட்டையில் பெரியாரவர்கள் தங்கியிருந்த இடத்தில் அவ்வூர் பிரபலஸ்தர்கள் உயர்தர அதிகாரிகள் வந்து சந்தித்தனர்.

## சின்னாளப்பட்டியில் பொதுக்கூட்டம்.

16-1-46 மாலை 4 மணிக்குத் தனிக்காரில் பெரியாரவர்களும் மற்றும் பலரும் சின்னாளப்பட்டி வந்து சேர்ந்தனர். உடனே ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய தெருக்களின் வழியாகச் சென்றது. வழி நெடுக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. $4\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகியது. ஒலி பெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியுடன் உட்கார்ந்து பெரியாரவர்களின் உணர்ச்சிமிக்க சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தனர். இவ்வுணர்ச்சியைக் கண்ட காங்கரஸ்காலிகள் தூரத்தில் நின்று கூச்சலிட்டுக் கூட்டத்தைக் கலைக்க முயன்றனர். ஒலி பெருக்கி நன்றாக இருந்ததால் பெரியாரவர்கள் கூச்சலை லட்சியம் செய்யாமல் மிக உணர்ச்சியுடன் பேசிக்கொண்டிருந்தார். பெரியார் விடாமல் பேசுவதையும் மக்கள் கேட்டுக் கொண்டிருப்பதையும் கண்ட காலிகளுக்கு மிகவும் அவமானம் உண்டாகவே எப்படியேனும் காலித்தனம் செய்ய வேண்டுமென்று கருதி கற்களை வீசினர். உடனே பெரியாரவர்கள், சால்வையை எடுத்துத்தலையில் கட்டிக்கொண்டு எல்லோரும் தலையில் துண்டைக்கட்டிக்கொள்ளுங்கள் ஒருவரும் கலையவேண்டாம் என்று கூறி மீண்டும் பேசிக் கொண்டே இருந்தார். இதைக் கண்ட காலிகள் மிகவும் அதிகமாகக் கூச்சலிட்டுக் கற்களை மாரி போல் வீசினர். உடனே அங்கு வந்திருந்த போலீசார்கள் தடியடிப் பிரயோகம் செய்தனர். உடனே கூட்டம் கலைய ஆரம்பித்தது. அவ்வூரில் போலீஸ் இல்லாததால் வெளியூரிலிருந்து இங்கு ஒன்றும் கலவரம் நடக்காதென்று கருதி இரண்டு போலீஸ்களும், ஒரு சப் இன்ஸ்பெக்டரும் வந்திருந்தனர். கலவரம் அதிகமாகவே சப் இன்ஸ்பெக்டர் பெரியாரிடம் கூட்டத்தைக் கலையுங்கள் என்று சொன்னார். உடனே பெரியார் நீங்கள் "என்னால் சமாளிக்க முடியவில்லை கலைத்து விடுங்கள்" என்று எழுதிக் கொடுங்கள், என்று சொல்லிவிட்டு மீண்டும் பேச ஆரம்பித்தார். பின்பு சப் இன்ஸ்பெக்டர், நாளையோ மறுநாளோ வேண்டுமானால் நான் பாதுகாப்போடு உங்கள் கூட்டத்தை நடத்தித்தருகிறேன் என்று கூறி விட்டு அவரே ஒலி பெருக்கி முன்னால் நின்று, காலிகள் கலகம் செய்வதாலும் நான் போதிய பந்தோபஸ்துடன் வராததாலும் இக்கூட்டத்தைக் கலைக்கிறேன் என்று கூறினார். பின்பு உள்ளூர்த் தோழர்களும் பெரியாரை வேண்டிக் கொள்ள பெரியார் கூட்டத்தை முடித்தார். இவ்வளவு கலவரம் நடந்தும் பெரியாரவர்கள் 1 மணி நேரம் பேசினார். திராவிடர் கழகத்தின் சார்பிலும், முஸ்லிம் லீகின் சார்பிலும், சித்தையன் கோட்டை திராவிடர் கழகத்தின் சார்பிலும் வாழ்த்திதழ்களும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. அன்றிரவே பெரியாரவர்கள் திண்டுக்கல் வந்து சென்னை செல்ல புறப்பட்டு ஈரோடு வந்து சேர்ந்தார்.

---

## அறிக்கை

வட ஆற்காடு இயக்கத் தோழர்கட்கு;-

பெரியார் அவர்களின் அறிக்கைப்படி இவ்வாண்டுக்கு நமது வட்டாரத்திலும் ஏராளமான அங்கத்தினர்கள் சேர்க்க வேண்டும், ஆகையால் துரிதமாக அங்கத்தினர்கள் சேர்க்கும் வேலையைக் கவனியுங்கள். சந்தா புத்தகம் வேண்டுவோர் தலைமை நிலையத்திற்கோ அல்லது என்னிடமோ எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

வி. எம். ராஜமாணிக்கம்,
வ. ஆ. மா. திராவிடர்கழக ஆர்கனைசர்,
திருப்பத்தூர் [வ. ஆ.]


# தமிழர் தன்மதிப்புப் பாடல்கள்

(புதுவைச் சிவம் எழுதியது)

இது நாட்டுப்பகுதி, சாதிபேதப்பகுதி, மாதர் பகுதி, மதப்பகுதி கலைப் பகுதி, மூடவழக்கப் பகுதி, தொழிலாளர் பகுதி, வேண்டுகோட் பகுதி, திராவிடப்பகுதி, பெரியார் பகுதி எனப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும், பல இனிய எளிய மெட்டுகளில் ஆக்கப்பட்ட பாடல்களைக்கொண்டது.

தமிழர்க்குத் தன்மான உணர்ச்சியையும்,
தொழிலாளர்க்கு எழுச்சியையும் உண்டுபண்ணுவது! விலை அணா 6.
தனிப்புத்தகம் வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக.
ஏஜண்டுகட்கு 25% கமிஷன் தரப்படும். தேவைக்கு எழுதுக.
கிடைக்குமிடம்:-

ஞாயிறு நூற்பதிப்பகம்,
28, அம்பலத்தாடு ஐயர் மடத்துத் தெரு, புதுச்சேரி. (F.I.)


ரோஜா முத்தையா

## திருநெல்வேலி மாவட்ட திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) 3-வது மாநாடு

26, 27-1-46 (சனி—ஞாயிறு) திருநெல்வேலி வார சந்தைக்கு வடபுரம் இருக்கும் தனம் ரைஸ்மில் கட்டிடத்தில் அமைத்திருக்கும் செல்வம் பந்தலில் நடைபெறும்.

தலைவர்:

திருச்சி

T. P. வேதாச்சலம் B. A. B. L.

திறப்பாளர்:

திராவிடர் தனிப்பெருந்தலைவர்

பெரியார் ஈ. வே. ரா.

திராவிடநாட்டுப்படத்திறப்பாளர்:

தோழர் C. N. அண்ணாதுரை M.A.,

கொடியேற்றுபவர்:

தோழர் மிராண்டா கஜேந்திரன் அம்மையார் B. A.,

சொற்பொழிவாளர்கள்:

தோழர்கள் ஜனார்த்தனம் எம். ஏ., அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்), நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) அழகர்சாமி, கருணாநிதி, யாகூப் ஆகியோர்.

K. M. பிரமநாயகம்,
வரவேற்புக்கமிட்டித்தலை.

M. சங்கரபாண்டியன்,
S. S. அர்ச்சுனன்,
காரியதரிசிகள்.

S. N. ராசன்,
தொண்டர் படைத்தலைவர்.

A. சேக்முகம்மது,
விளம்பர அதிகாரி.

குறிப்பு:— திருநெல்வேலி மாவட்டத் திராவிடர் கழக 3-வது மாநாடு திருநெல்வேலியில் திருச்சி தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் பிரபலமாய் நடைபெறுவதால், இயக்கத் தோழர்கள் இதற்கு பொருளுதவி செய்ய வேண்டுகிறோம். பணம் அனுப்புவோர்களும், கடிதம் எழுதுவோரும் காரியதரிசி, குமரவிலாஸ் ஹோட்டல் மூலம், வடக்கு ரத வீதி திருநெல்வேலி டவுன் என்று எழுதவும்.

---

## தென்னாற்காடு மாவட்ட தோழர்கட்கு

அன்புடையீர்,

பெரியார் அவர்கள் பிப்ரவரி முதல் வாரத்தில் நமது மாவட்டத்தில் சுற்றுப் பயணம் வருவதால் அதற்குள் நமது மாவட்டத்தில் (10,000) பத்தாயிரம் அங்கத்தினர்களைச் சேர்த்துதவும்படி வேண்டுகிறேன்.

ஆ. திராவிடமணி.

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் பாண்டியநாட்டு சுற்றுப்பிரயாணம் 25-நாட்களுக்கு தொடர்ச்சியாகப் போடப்பட்டிருந்ததானது 12-நாட்கள் சுற்றுப்பிரயாணம் நடந்ததும் மற்றவைகளை ஒத்திபோட்டுவிட்டு வரவேண்டியதாக ஆகிவிட்டது. இதற்கு உடல்நலமில்லாதது முக்கியகாரணம் அல்ல. வேறுபல அவசர சோலிகள் ஏற்பட்டுவிட்டன. சென்னைக்கு பத்திரிகை விஷயமாய்ச் செல்லவேண்டிய அவசரமும், ஒரு நிர்வாகக் கமிட்டி கூட்டம்போடவேண்டுமென்று நிர்வாகக்கமிட்டித் தலைவர் தோழர் வேதாசலம் அவர்கள் மதுரைசென்று வலியுறுத்திய காரணமும் முக்கியமாகும். விட்டுப்போன சுற்றுப்பிரயாணத்திட்டம் மறுபடியும் துவக்கப்படும் 20ந் தேதி திருச்சி, 22-மதராஸ் சென்று 26, 27ந் தேதிகளில் திருநெல்வேலி மாவட்ட திராவிடர் கழக மாநாட்டுக்குச் செல்லுவார், 1-2-46 வேலூர், 3-2-46 கரூர் அடுத்த புகளூர் மாநாட்டுக்குச் செல்லுவார். இதன் மத்தியில் பத்திரிகை விஷயமாக 2, 3 தடவை சென்னைக்கும் சென்றுவருவார். உடல் நலம் சரி இல்லை என்பது ஒருபுறம் இருந்தாலும் அதற்கும் இவ்வேலைகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றே சொல்லலாம்.

ஏனெனில் கருப்புச்சட்டைப் படை தொண்டர்கள் எண்ணிக்கையும்; அவர்களது தொண்டும் பெரியார் உடல்நலக்குறைவை ஞாபகமற்றதாகவே ஆக்கிவிடும். ஆதலால் மற்ற வேலைத்திட்டம் நிறைவேறுமட்டும் காயலா படுக்கக்கூட கூடுமானவரை நேரம் ஒதுக்கப்படமாட்டாது.

---

## நடக்க இருப்பவை

● 20-1-46ல் திருச்சி டவுன் ஹாலில் தோழர் எ. சின்னதுரை அம்பலக்காரர் தலைமையில் திருச்சி ஜில்லா திராவிடர் கழக நிர்வாகத் தேர்தல் கூட்டம் நடைபெறும்.

● சென்னை எழும்பூர் சாமி செட்டி தெருவிலுள்ள கார்ப்பரேஷன் லயினுக் கருகாமையிலுள்ள பார்க்கில் 27-1-46ல் தோழர் கஜேந்திரன் தலைமையில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

● 23-1-46ல் சிவகங்கை தாலூகா திராவிடர் கழக நிர்வாகக்குழு தேர்தல் நடைபெறும். கழக உறுப்பினர்கள் தவறாது வருமாறு வேண்டப்படுகிறார்கள்.

---

## திருமணம்

திருச்சி, தமிழ்நாடு விதவா விவாக சங்க ஆதரவில் 10-12-45ல் சங்கத்தலைவர் தோழர் இராமானுசம் தலைமையில் தோழர்கள் ராமுக்கும் க. தனபாக்கியத்தம்மைக்கும் பதிவு திருமணம் நடந்ததின் நினைவாக 'குடி அரசுக்கு ரூ: 1 நன்கொடை அனுப்பப்பட்டது.

---


ஆம், உங்களுக்கு மகத்தான புதுவருட கொண்டாட்டங்கள் இருந்தன என்பது நமக்குத் தெரியும். ஆனால் கடல்கடந்த நாடுகளில் சேவை செய்யும் துருப்புகளின் நிலை என்ன?

★

# மே. த. கவர்னரின்

சைன்ய வசதி, கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு தாராளமாகப் பணம் கொடுத்துதவுதல் மூலம் அவர்களுக்கு உண்மையான மகிழ்ச்சி தரக்கூடிய புத்தாண்டை உண்டாக்குவதற்கு உங்களால்தான் முடியும்.

★

எனவே

ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, C/O இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லைன் பீச், சென்னை, என்ற விலாசத்துக்கு தயவு செய்து உங்களது பணத்தை அனுப்பிக்கொடுக்கவும்.

குடி அரசு

1946-ஆம் ஜனவரி 19-உ

# நமது வேலை

நம்நாட்டு அரசியல் நிலைமை நம் மக்களுக்கு சற்றேரக்குறைய விளங்கி இருக்குமென்றே நினைக்கிறோம். நம் சமுதாயத்தை இழிவு படுத்தி, நம் செல்வத்தை சுரண்டி ஆரியர்களும் அவர் தம் துணைவர்களாகிய ஆங்கிலேயரும் நல்ல வண்ணம் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வசதி பெறுவது தான் நமதுநாட்டு அரசியல்தன்மையாக இருந்து வருகிறது. இதில் மேற்கண்ட இருசாராரும் அதாவது இந்திய ஆரியர்களும் ஐரோப்பிய ஆரியர்களும் வெற்றி பெற்று இருக்கிறார்கள். இதை இதுவரை நம் மக்கள் சரிவர உணராததால் இதை எதிர்த்து வேலை செய்வதை முக்கிய காரியமாக நம்மவர்கள் கொள்ளவில்லை என்பதுமாத்திரமல்லாமல் நம் மக்களே (அதாவது திராவிடர்களே) அச்சுரண்டல்களுக்கும் ஆதிக்கங்களுக்கும் அவ்விரு ஆரியர்களுக்குக் கூலிகளாய் அடிமைகளாய் இருந்து தொண்டாற்றி வந்திருக்கிறார்கள்—வருகிறார்கள். இந்த நிலையில் நாம் அவ்வாரியக் கூட்டத்தினரால் தங்களது நலனுக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சட்டதிட்டங்களுக்கும், சாஸ்திர தர்மங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு வேலை செய்து மீளுவது என்பது முடியாத காரியம் என்பதோடு அது பயனற்ற காரியம் என்றும் சொல்லவேண்டி இருக்கிறது, பயனற்ற வீண் வேலை என்று சொல்வது மாத்திரமல்லாமல் இவ்வேலைகளின் பயன் அவர்களுக்குப் பயன்படுவதாகவும் இருந்து வருகின்றன.

இதனாலேயே நாம் புது முறை கண்டுபிடிக்க வேண்டியவர்களாகி விட்டோம். அப்புது முறைதான் நாம் திராவிடர்கள், நம்நாடு திராவிடநாடு, நம்மை சுரண்டுகிறவர்கள் ஆரியர்கள் அவ்வாரியர்கள் இந்திய ஆரியர்கள், ஐரோப்பிய ஆரியர் என் இருவகையார்கள் என்று கண்டுகொண்டதாகும். இவ்வகையில் இந்த ஆரியர்கள் மதம், சாஸ்திரம், அரசியல், முதலிய துறைகளில் நம்மை தங்களுக்கு ஆள் படுத்திக்கொண்டு அரசியல் என்னும் பேரால் நம்மை தன்வயப் படுத்திக்கொண்டு சுரண்டி அச் சுரண்டலில் ஐரோப்பிய ஆரியனுக்கு ஒருபாகம் கொடுத்து விட்டு பெரும்பாகத்தை இந்திய ஆரியர்கள் அனுபவிக்கிறார்கள். இதிலிருந்து மீளுவதற்கு ஆரியத்தில் இருந்து, எவ்வகை ஆரியத்தில் இருந்தும் விலகவேண்டும். விலகி ஆகவேண்டும். இல்லாவிட்டால் கணவன் மனைவி போன்றோ, தகப்பன் பிள்ளை போன்றோ, எஜமான் ஆள்காரன் போன்றோ ஆரியனுக்கும் நமக்கும் தன்மை முறை வைத்துக் கொண்டு குறை கருதாமல் இழிவு கருதாமல் திருப்தியாய், மனதிம்மதியாய் வாழவேண்டும். முடியாவிட்டால் இப் போராட்டத்தில் மடிந்து ஒழிய வேண்டும். அப்படிக்கு இல்லாமல் சாந்தமும், ஓய்வும் அற்று பயனில்லாத வேலையில் பணியை செய்துகொண்டு இழிவும் குறையும் கொண்ட மனத்தினராய் துக்க உருவாய் வாழ்வது மனிதத் தன்மைக்கு ஏற்றதல்ல என்பது நமது முடிவு.

திராவிட சமுதாயத்திற்கு மானம், அறிவு, மனிதத்தன்மை என்பவை இல்லாமல்போக-அடியோடு இல்லாமல்போக ஆரியர்கள் செய்த முயற்சியில் வெற்றிபெற்று விட்டார்கள் என்றால் அந்த வெற்றியை அழித்து நாம் மனிதத்தன்மை பெறுவது என்பது இலேசான காரியமல்ல என்றே சொல்லுவோம். இதில் இறங்குவதும் மிக்க யோசனை செய்து செய்ய வேண்டிய காரியம் என்றும் சொல்லுவோம்.

ஏன் எனில் திராவிடரின் தன் மானம், அறிவு, மனிதத்தன்மை இன்று நேற்றல்லாமல் 2000, 3000 ஆண்டுகளுக்கு முன் பறிக்கப்பட்டவைகளாகும். திராவிட அரசர்கள் மூவேந்தர்கள், நான்கு வேந்தர்கள், ஐவேந்தர்கள் காலத்திலேயே இந்த வேந்தர்கள் ஆரிய அடிமைகளாக இருந்தவர்கள். அவர்களது ஆரிய அடிமை ஆட்சியில் நாம் இருந்தவர்கள் என்பது மாத்திரமல்லாமல் அவர்கள் சந்ததியார்கள் என்றும் பெருமை பேசிக் கொள்ளுபவர்களாயிருக்கிறோம். இதன் இழிவை நம்மில் வயது வந்து வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் சிறிதும் உணரார்கள். ஆகவே நமது வேலை அடியோடு புதிய வேலையாக இருக்கிறது. அதுவும் புரட்சி வேலையாக இருக்கிறது. அதனாலேயே மிக மிக கஷ்டமான வேலை என்கிறோம். அதனாலேயே இவ்வேலைக்கு இளைஞர்களையும் மாணவர்களையும் பெரிதும் அழைக்கின்றோம். அவ்விளைஞர்களும் மாணவர்களும் கூட, இளைஞராய் மாணவர்களாய் இருக்கும்வரைதான் இந்தப் போராட்டத்திற்குப் பயன்படுவார்களே தவிர பெரியவர்களாக கற்றவர்களாக ஆகிவிட்டால் நமக்கு பயன்பட மாட்டார்கள் என்பதோடு நமக்கு எதிரிகளாகவும் ஆகிவிடுவார்கள் என்றும் சொல்லலாம். இதற்கு மாறாக என் வேறு மாறாகவும் சில பெரியவர்கள் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் நமக்கு எதிர்பாராத லாபம் என்றுதான் சொல்லத்தக்கவர்களாவார்கள். இந்த இருவகை மக்களையும் கொண்டு நாம் இன்று போராட்டம் துவக்கவேண்டும். எப்படிப்பட்ட போராட்டம் என்றால் புதுவகைப் போராட்டம் என்று முன்னமே சொன்னோம்.

அதாவது, நாம் திராவிடர்கள், நம்நாடு திராவிடநாடு, திராவிடநாடு திராவிடருக்கே முழு சுதந்திரம் உடையதாக ஆகவேண்டும். எப்படிப்பட்ட அன்னியருக்கும்-திராவிடரல்லாதவருக்கும் இங்கு ஆதிக்கம் இல்லை, சுரண்டுதல் இல்லை, போக்குவரவு நடமாட்ட சுதந்திரமுமில்லை என்று ஆகத்தக்க போராட்டமேயாகும்.

இப்படிப்பட்ட போராட்ட நிலையில் உள்ள நமக்கு அண்மையில்—கூடியவிரைவில் ஒரு சரியான போர்வேலை வரப்போகிறது. அதுதான் சில திராவிடர்களை "வானர சைனிய"மாகக் கொண்ட ஆரிய காங்கரசார் பதவி வகிக்கப்போகிறார்கள் என்பதாகும்.

காங்கரஸ் பதவி வகிப்பது என்பது ஐரோப்பியவாரியன் ("தேவர்கள்") செய்து கொடுத்த அனுகூலமான வழியின் மூலம் இந்திய ஆரியர்கள் அதிகா

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ரப்பதவிகளை அடைந்து ஏக போக ஆட்சி செய்யப்போகிறார்கள் என்பதாகும். இதை—இந்த ஆட்சியை கவிழ்க்க வேண்டியது—கவிழ்த்தே ஆகவேண்டியது நமது இன்றியமையாக் கடமையாகும். இதற்கு ஆக செய்ய வேண்டிய போராட்ட வேலைகளுக்கு நாம் புதியபோர் திட்டம் எதையும் தேடிக்கொண்டு திரியவேண்டியதில்லை. நம் எதிரிகள் நம்மை இழிவுபடுத்தி ஆள்க்கொள்ள கைகொண்ட முறையை நாம் கைக்கொண்டாலே போதும் என்போம்.

பதவியில் இருப்பது என்பது எப்போதும் பதவியில் இல்லாமல் இருப்பவர்களைவிட இருப்பவர்களுக்கு சற்று பலம் குறைவு என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் பதவியில் இல்லாதவர்கள் கட்டுப்பாடற்றவர்களாய், கோழைகளாய், தனிப்பட்ட சுயநலக்காரர்களாய் இருப்பாரகளானால் பதவியில் இருப்பவர்களுக்குத்தான் அதிக பலம் என்று சொல்லவேண்டும். ஆதலால் நம் எதிரிகள் பதவியில் இருக்கும்போது நாம் கட்டுப்பாடும் மானஉணர்ச்சியும் கொண்டு வீரர்களாக தன்னலமற்றவர்களாக இருப்போமானால் எதிரிகளை வீழ்த்துவது வெகு எளிதான காரியமாகும்.

நம் கட்டுப்பாட்டுக்கும் சுயநலமற்ற தன்மைக்கும் வாலிபர்களும், இளைஞர்களும், மாணவர்களும் அதிகமான தகுதி உடையவர்கள் என்று முன்னமேயே சொன்னோம். இவர்களைச் சேர்ப்பது இன்றைய போர்த் திட்டத்தில் முதல் வேலையாகும். இவர்கள் இவ்வேலையில் இறங்கினால் தங்கள் பெற்றோர்களைச் சற்றாவது ஏமாற்றமடையச் செய்து தீரவேண்டிய நிலை வந்துதான் தீரும். கல்வியையும் சற்று இரண்டாவதாகக் கருதவேண்டியதாய்தான் முடியும். ஏனெனில் நமது போர்த்திட்டம் ஒரு புரட்சித் திட்டமாக ஆகிவிட்டது. சர்வம் ஆரியமயமாய் ஆகி வலிவு பெற்றுவிட்ட காலத்தில் ஆரியத்தோடு போர் தொடுக்கவோ மற்றும் சர்வம் இந்திய மயம், இந்துமத மயம் என்பதாக ஆகி நன்றாக வேரூன்றிவிட்டதின் பிறகு இந்த இந்தியா இந்து என்பவைகளோடும் போர் துவக்கவோ வேண்டும் என்றால் போர் தொடுப்போருக்கு மகத்தான தைரியம் வேண்டும் என்பது மாத்திரமல்லாமல் இப்போரில் "மகத்தான தொல்லை, துன்பம், நட்டம் எற்படினும் அடையத் தயாராக இருக்கிறோம்" என்பது தான் அவர்களது மந்திரமாகவும் இருக்க வேண்டும். இந்தப் புரட்சியில் நாம் வெற்றி பெற்றுவிட்டால் பிறகு வெகு காலத்திற்கு திராவிடத்திற்கு, திராவிட சமுதாயத்திற்கு ஈடும் எடுப்பும் கொண்ட சமுதாயம் உலகில் இருக்க முடியாது என்றே சொல்லலாம்.

எனவே அண்மையில் அமையப் போகும் காங்கரஸ் ஆட்சியைக் கவிழ்க்கவேண்டும். கவிழ்க்க வேண்டும் என்றால் அதற்காக கங்கணம கட்டிக்கொள்வது என்னும்படியான ஒரு கறுப்புச் சட்டையைப் பெருக்கவேண்டுமே அல்லாமல் நமது ஊக்கத்தையும் வலிவையும் எதிரிகள் பதவிக்குப் போவதில் குறுக்கே நின்று களைத்துப் போகக்கூடாது. எப்படியும் அவர்கள் அங்கு போய் அமர்ந்துதான் தீருவார்கள். அமர்ந்த பின் கவிழ்க்க படை முஸ்தீப்பு திரட்ட இதற்கென்றே 20-1-46ல் திருச்சியில் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கமிட்டி அங்கத்தினர்கள் அவசியம் வந்து கலந்து கருத்துப் பெற்று ஆங்காங்கு சென்று ஆவன செய்யவேண்டும். ஒரு லட்சம் அங்கத்தினர், அரை லட்ச ரூபாய், ஆயிரக்கணக்கான கறுப்புச்சட்டைத் தொண்டர், எப்படியாவது ஒரு தினசரிப் பத்திரிகை ஆகிய இவைகளுக்கு ஆக அவை நடைபெறும்படியான திட்டம் போடவேண்டும்.

இன்று நாம் அறிந்தவரை தமிழ் நாட்டில் நல்லதொரு திராவிட உணர்ச்சியும், இளைஞர்கள், மாணாக்கர்கள் இடை உற்சாகமான எழுச்சியும் இருப்பது நன்றாக விளங்குகிறது. பல இளைஞர்கள் முழு நேர வேலைக்குத் துடிக்கிறார்கள். பல இளைஞர்கள் சீக்கிரம் தங்களுக்கு ஏதாவது வேலை கொடுத்துப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று பதைக்கிறார்கள். பெரியோர்கள் பலர் எதற்கும் தாங்கள் தயார் என்கிறார்கள். சுயநலமிகளும் உணர்ச்சியற்றவர்களும் நாணயமற்றவர்களுமானவர்களை ஒதுக்கத் துணிவும், வசதியும் பெற்று இருக்கிறோம். இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம் இது வரை இருந்ததில்லை. இனியும் ஏற்படுமா என்ற நம்பிக்கை இல்லை. ஆகையால் ஏதாவது ஒரு ஒழுங்கான போராட்டத்திற்கு வழி கோலவேண்டியதும் கட்டுப்பாடும் நாணையமும் உள்ள ஒரு போர் மந்திரிசபை அமைக்க வேண்டியதும் இதுசமயம் அவசியமாகும். இளைஞர்களே என்ன செய்யப்போகிறீர்கள்?

## கறுப்புச் சட்டைப் படை அமைப்பு

படையில் சேர, மனு பாரம் வேண்டியவர்கள் "ரிப்ளை" கார்டில் எழுதவும்.

குறிப்பு:- 'ரிப்ளை' கார்டில் ரிப்ளை பாகத்தில் விலாசம் எழுதாமல் வெறும் கார்டாக அனுப்பவும்.

க. ச. ப. அமைப்பாளர்,
குடி அரசு ஆபீசு, ஈரோடு.

## பார்லிமெண்ட் தூதுக்கோஷ்டி

பார்லிமெண்ட் தூதுக்கோஷ்டி வந்தால் நமக்கென்ன பயன். நாம் ஒரு கட்சி, அல்லது ஒரு கூட்டம் இருக்கிறோம் என்பது தூதுக் கோஷ்டிக்குத் தெரியுமா என்பதே நமக்குச் சந்தேகமாக இருக்கிறது. அப்படி அவர்களுக்கு ஏதாவது (ஜஸ்டிஸ் கட்சி என்னும் பேரால்) ஒரு கட்சி இருக்கிறது என்று தெரிந்தாலும் அது தோழர் பி. பாலசுப்பிரமணியம், சர். பி. டி. ராஜன், சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் ஆகியவர்கள் உண்டாக்கிய ஒரு கூட்டு லிமிட்டெட் கம்பெனிக் கட்சியா அல்லது இதுவரை S.I.L.F. ஆக இருந்து திராவிடர் கழகமாக பெயர் மாறிய Dravidian Federation கட்சியா எது—எந்தக் கட்சி ஜஸ்டிஸ் கட்சி

## வேலூர் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்

1—2—46 வெள்ளியன்று மாலை 5மணிக்கு
கோட்டை வெளியில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

திராவிடநாட்டின் தனிப்பெருந்தலைவர்

# பெரியார் ஈ. வெ. ராமசாமி

அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

அனைவரும் வரவேண்டுகின்றோம்.

வேலூர் }
10-1-46 }

இங்ஙனம்,
திராவிடக் கழகத்தார்.

என்று சொல்லப்பட்டகட்சி? என்பது தூதுகோஷ்டியாருக்குத் தெரிந்திருக்காது. இதை மாகாணக்வர்னர் துரை ஒழுங்காகத் தெரிவித்திருந்தால் தெரிவித்து இருக்கலாம். ஆனால் அவர் அப்படி நீதியாய் நடந்திருப்பார் என்று நம்மால் எதிர்பார்க்க முடியவில்லை. ஏனெனில் ஐஸ்டிஸ் கட்சிக்கொள்கைக்கு விரோதமாய் தேர்தலுக்கு கட்சி பேரால் நின்ற. அபேக்ஷகர் தன்னை கவர்னர் நிற்கச் சொன்னார் என்று மக்கள் கருதும்படி பேசி இருக்கிறபடியாலும், கட்சி விஷயமாய் சர்க்கார்—கவர்னர் நடந்து கொண்ட முறை நமக்குப் பிடிக்காததாலேயே சர்க்காரிடம் வைத்துக்கொள்ளும் சம்மந்தத்தை ஒரு அளவுக்குக் குறைத்துக்கொண்டும் இருக்கிறபடியால் கவர்னர் துரை நம் கட்சியைப் பற்றி சரியானபடி தெரிவித்து இருக்கமாட்டார். எனவே நமக்குள்ளும் துரோகிகளும், சர்க்கார் செய்கையும் இப்படி இருந்தால் அதோடுகூட நாமும் இந்தியா முழுதும் அறியும்படியான காரியம் ஒன்றும் செய்யாமல் "கோழை"களாகவும் கஷ்ட நஷ்டமடையப் பின்வாங்கும் "சுயநலக்காரர்கள்" என்று சொல்லும்படியாகவும் நடந்துகொண்டால் எப்படி நம்மை தூது கோஷ்டியார் பார்க்க வரக்கூடும்? அந்தப்படி பார்த்தாலும் நம்மிடம் அவர்கள் எப்படி பயம் வைத்து மதிப்புவைத்து நீதி காட்டக்கூடும்? ஆகவே தூதைப் பற்றி நாம் கவனிப்பதில் பயன் இல்லை. அன்றியும் அவர்களால் நமக்கு அளிக்கப்படும் பிச்சையும் நமக்குக் கிடைத்தாலும் அவமானமாகக் கருதக்கூடியதாகும். அவர்கள் கேட்பதைக் கேட்டு விட்டு செய்வதைச் செய்யட்டும். நம்மால் ஆனதைச் செய்து பெறக்கூடியதைப் பெறலாம். காலந்தாழ்ந்ததால் முழுகிப் போவது ஒன்றும் இல்லை. எனவே அழைப்பை எதிர்பாராமல் நம்மை நாம் தயார்செய்து கொள்ளுவோமாக.

---

## சின்னாளப்பட்டி குழப்பம்

---

மதுரைஜில்லா சுற்றுப்பிரயாணத்தில் சரியான காலித்தனம் நடந்தது. இதுவரை நடந்திராதது என்றே சொல்லலாம்.

இது புதுச்சேரி கலவரத்தை வென்றுவிட்டது. காரணம் புதுச்சேரிபோலவே உள்ளூர் தகரார் என்று சொல்லப்பட்டது. ஆனாலும் இது மிகவும் அக்கிரமமாகும். சப் இன்ஸ்பெக்டர், போலீஸ்காரர்கள் ஓடி ஒளியவேண்டி ஏற்பட்டுவிட்டது. சப்இன்ஸ்பெக்டர் உண்மையை சொல்லிவிட்டார் "காலித்தனத்தை தன்னால் சமாளிக்க முடியவில்லை" என்று. பிறகு அவரே ஒலிபெருக்கியில் மக்களை கூப்பிட்டு எங்களால் சமாளிக்க முடியவில்லை, நீங்கள் ஓடிப் போய் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டார்.

இம்மாதிரி ஒரு கட்சியார் காங்கரசார், காந்திபெயரைச் சொல்லிக் கொண்டு இவ்வளவு கர்வித்தனம் செய்தும், இவர்களால் சட்னி செய்துவிடக்கூடிய மற்றக் கட்சியார் அங்கு கல்அடி வாங்கிக் கொண்டு சிரித்தவண்ணம் இருந்தார்கள். இதற்குக் காரணம் பெரியார் கட்டளையேயாகும். காங்கரஸ்காரர்கள் என்பவர்கள் பேசிய ஆபாச வசவுப்பேச்சுகள் பெண்கள் (சுமார் 600 பெண்கள் வந்திருந்தார்கள்) காதை அடைத்கொண்டார்கள். சுமார் 6, 7-பேருக்கு தலையில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. பெரியார் யார் இழுத்தும் அந்த இடம்விட்டுப் பெயராமல் தலையில் துணி கட்டிக்கொண்டு கல்மாரிக்கு நடுவில் நின்றுகொண்டு இருந்தார். சப்இன்ஸ்பெக்டர் பெரியாரை வணங்கிக் கெஞ்சி மேடையை விட்டு இறக்கி சமீபத்தில் ஒருதாழ்வாரத்தில் நிறுத்தி, இர்வு வண்டி முதலிய உதவிசெய்து வழியனுப்பிக்கொடுத்தார்.

பொதுவாக காங்கரசார் வெறிகொண்ட காலிகளாக நடந்துகொண்டார்கள். மற்றவர் சிரித்த வண்ணம் இருந்தார்கள் இது உண்மை. மற்றது சர்க்கார் ரிபோர்ட்டில் இருக்கலாம்.

ஆனாலும் அங்கு மறுபடி கூட்டம் நடக்கும் என்று தெரிகிறது. என்ன ஆகுமோ!

---

## நமது தோழர் மறைவு

கோவை ஜஸ்டிஸ் கட்சி பிரபல தலைவரும், மத்திய திராவிட நிர்வாக கழக உறுப்பினருமான தோழர் எ. கிருஷ்ணசாமி செட்டியார் அவர்கள் கோவையில்தனது இல்லத்தில் 10-1-46ந் தேதி மாரடைப்பினால் திடீரென இயற்கையெய்தின செய்திகேட்டு வருந்துகிறோம்.

இவர் ஜஸ்டிஸ்கட்சி சுயமரியாதை இயக்கம் இவைகள் ஆரம்பகாலம் தொட்டு கட்சியில் தீவிரமாக உழைத்து வந்தார். இவர் கட்சிக்காக தன் முழு மனதுடனும், பலத்துடனும் உழைத்து வந்ததல்லாமல் கட்சியின் முன்னேற்றங் கருதி உழைத்த இளைஞர்களை உற்சாகப்படுத்திவந்தார்.

இவர் தனது மனைவியையும், நான்கு மக்களையும் ஏராளமான நண்பர்களையும் விட்டு பிரிந்தார். அவர்களை இழந்து துயரத்தில் ஆழ்ந்து நிற்கும் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் எமது அனுதாபம்.

## கரூர் தாலூகா 4வது திராவிடர் கழக மாநாடு

3-2-46 தேதி ஞாயிற்றுக்கிழமை ந. புகளூர் தவுட்டுப்பாளையம் நாகம்மையார் பந்தலில் நடைபெறும்.

தலைவர்:
ஈரோடு பி. ஷண்முகவேலாயுதம்

திறப்பாளர்:
சேலம் எ. சித்தையன்

கொடியேற்றுவிழா:
கரூர் என். ரத்தினம்

கறுப்புச்சட்டைப்படை அணி வகுப்பில் தளபதி சி. என். அண்ணாதுரை வீர உரை.

பெரியார் ஈ. வெ. ராமசாமி, தோழர்கள் திருச்சி டி. பி. வேதாசலம், உழவன் பழனிக்குமரன், மணிவாசகம் முதலானவர்கள் கலந்து கொள்ளுவார்கள்.

அன்று மாலை புதுப்பாளையம் தோழர் சிவப்பிரகாசம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். மாநாட்டுக்கும், பொதுக்கூட்டத்துக்கும் ஒலி பெருக்கி உண்டு.

## திராவிடர் கழகத் தோழர்களே!

சென்ற ஆண்டில் நீங்கள் அங்கத்தினர்களா?

அப்படியாயின் இன்றே நான்கணா செலுத்தி இவ்வாண்டும் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சென்ற ஆண்டில் சேராதிருப்பின் இன்றே நான்கணாசெலுத்தி அங்கத்தினராகுங்கள்.

இரசீது புத்தகம் வரவழைத்து அதிகமாக அங்கத்தினர்களைச் சேர்க்க முடியாத இடங்களில் உள்ள தனிப்பட்டவர்கள் 5½ அணா தபால் தலை, தலைமை நிலையம், 'குடி அரசு' ஆபீசு, ஈரோட்டிற்கு அனுப்பினால் அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்ட இரசீது அனுப்பிவைக்கப்படும். இன்றே சேருங்கள்.

ஆ. திராவிடமணி.

## வரப்பெற்றோம்.

திருச்சி ஆர்ட் டைமண் ஒர்க்ஸ், 130, பெரிய சௌராஷ்டரதெரு, திருச்சியிலிருந்து இரண்டு தமிழ், ஆங்கில தேதி குறிப்பிட்டுள்ள அழகிய காலண்டர்கள் வரப்பெற்றோம்.

## மாணவர் பகுதி

7-1-46ல் மாயவரத்தில் தோழர் கே. வேங்கடாசலம் பி. ஏ., பி. எல்., தலைமையில் நடந்த திராவிட மாணவர் கழக கூட்டத்தில் தோழர் டி. சடகோபன், ஈ. வெ. கி. சம்பத், சனார்த்தனம் எம்.ஏ., ஆகியோர் பேசினர்.

o o

15-1-46ல் சேலம் விக்டோரியோ டாக்கீஸில் திராவிட மாணவர் கழக ஆதரவில் தோழர் சேதுபாகவதரால் ஒரு இன்னிசை கச்சேரி நடைபெற்றது. பின் தோழர்கள் சித்தையன் சனார்த்தனம் முதலியோர் பேசினர்.

o o

16-1-46ல் கோவையில் திராவிடர் மாணவர் கழகம் அமைப்புக் கூட்டம் தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் கூடி தோழர் க. தண்டபாணியை செயலாளராகக் கொண்ட ஒரு செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

13-1-46ல் உடுமலைப் பேட்டையில் தோழர் எம். எஸ். கனகராசன் தலைமையில் தோழர் நெடுஞ்செழியன் அவர்களால் திராவிட மாணவர் கழகம் நிறுவப்பட்டு நிர்வாக குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## திராவிட மாணவர் கழக ஆண்டுவிழா

30-12-45ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இக்கழக ஆண்டுவிழா திருப்பத்தூர் மீனாட்சி டாக்கீசில் தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடந்தது. அது சமயம் தோழர் வி.எஸ். பழனிசாமி முதலியார் படத்தை டி. என். சுப்ரமணியம், சி. எம். துரைசாமிநாயுடு படத்தை எம்.நடேசம், பெரியார் ஈ. வெ. ரா. படத்தை எ. டி. நாராயணசாமி. சர் எ. டி. பன்னீர்செல்வம் படத்தை என். வி. நடராசன், கவி பாரதிதாசன் படத்தை இரா. நெடுஞ்செழியன், திராவிடநாடு படத்தை எ. பி. சனார்த்தனம் முறையே திறந்துவைத்தார்கள். தலைவர்களுக்கு கறுப்பு மாலை போடப்பட்டது. அன்று மாலை 5-மணிக்கு எம். நடேசம் பிள்ளை அவர்கள் தலைமையில் முனிசிபல் பள்ளி மைதானத்தில் மாபெருங் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் எ. பி. சனார்த்தனம், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், எ. டி. நாராயணசாமி, தளபதி சி. என். அண்ணாதுரை ஆகியோர் திராவிடநாடு ஏன் பிரியவேண்டும் என்னும் பொருள் பற்றி விளக்கமாக பேசினார்கள். அன்றிரவு இரா. நெடுஞ்செழியன் தலைமையில் தங்கவயல் தன்மான இயக்கத் தோழர்களால் "ஞானோதயம்" நாடகம் நடைபெற்றது.

## நீத்தார் நினைவுநாள் கூட்டம்

பொள்ளாச்சி திராவிடர் கழக தலைவர் தோழர் பி. கே. கிருஷ்ணசாமி மனைவி இயற்கை எய்தியதை முன்னிட்டு 11-1-46ல் நாராயண டாக்கீஸில் தோழர் அம்மினியப்ப பிள்ளை தலைமையில் நீத்தார் நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எ. பொன்னம்பலம், எ. சித்தையன் முதலியோர் பேசினார்.

o o

சென்னை திருவல்லிக்கேணி தோழர் மா. இராசமாணிக்கம் இயற்கை எய்தியதை முன்னிட்டு 8-1-46ல் எஸ். ஆர். சாண்டோ தலைமையில் நடந்த நீத்தார் நினைவுநாள் கூட்டத்தில் தோழர்கள் என். ஜீவரத்தினம் ரா. ப செம்பியன் முதலியோர் பேசினர்.

o o

சென்னை விசாலாட்சி அம்மையார் இயற்கை எய்தியதை முன்னிட்டு 10-1-46ல் தோழர் ராகவலு தலைமையில் நடந்த இரங்கற் கூட்டத்தில் தோழர்கள் எ. மகிமைதாஸ், எஸ். டி. எம். ஜீவானந்தம், சா. தி. மு. பழனிசாமி முதலியோர் பேசினர்.

o o

வேட்டவலம் குறுநில மன்னர் தோழர் அ. வ. கி. வா. சக்கரையா பண்டாரியார் இயற்கை எய்தியதை முன்னிட்டு நடந்த இறுதி சடங்கில் தோழர் முருகன் ஒரு இரங்கற்பா வாசித்தளித்தார்.

தயாராகிறது!

"இருமணிகள்"

(பாகவதர், கிருஷ்ணன் வாழ்க்கை வரலாறு)

ஏராளமான புகைப்படங்களுடனும், அழகிய முகப்புடனும் தயாராகிறது.

பதிப்பாசிரியர்:- G. R. நாதன்.

விலை ரூபா 5-0-0 முன்பணமனுப்பினால் தபால்செலவினும்

தேவைக்கு:

வேங்கை வெளியீடு,

புத்தகவியாபாரிகள், தாராபுரம்.

## கருணை காட்டுக!

(கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்ற கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக் கூட்டங்களில் தமிழ்மணிகள், நகைச்சுவை அரசு N. S. கிருஷ்ணன், இசை உலக ஒளி M. K. தியாகராச பாகவதர் இருவரையும் கருணை காட்டிவிடுதலை செய்யுமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.)

o o

10-1-46ல் ஸ்ரீரங்கத்தில் தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் நடந்த கூட்டம்.

10-1-46ல் திருச்சி பீமநகரில் தோழர் இரத்தினவேலு தலைமையில் நடந்த கூட்டம்.

o o

ஜலகண்டபுரத்தில் 10-1-46ல் தோழர் எஸ். இராசகோபால் செட்டியார் தலைமையில், கலையறிவு சமகம், திராவிடர் கழகம், சுயமரியாதைச் சங்கம், பகுத்தறிவு நடிகர் சமகம், நெசவுத் தொழிலாளர் சங்கம், இவைகளின் சார்பில் நடந்த கூட்டம்.

7-1-46ல் ஆலத்தம்பாடியில் தோழர் காளியப்பன் தலைமையில் நடந்த கூட்டம்.

திருவண்ணாமலையில் 3-1-46ல் தோழர் டி. எம். இரங்கநாதன் தலைமையில் நடந்த திராவிட வாலிபர் கழக அங்கத்தினர் கூட்டம்.

3-1-46ல் காட்டூர் மருத்துவர் சங்க ஆண்டு விழா.

o o

12-1-46ல் கூடிய நகை மணி பகுத்தறிவு கழக அங்கத்தினர்களின் கூட்டம்.

6-1-46ல் கும்பகோணத்தில் தோழர் சக்கிரபாணி பத்தர் தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

14-1-46ல் மயிலாப்பூர் திராவிடர் கழக ஆதரவில் தோழர் சி. டீ. டி. அரசு தலைமையில் நடந்த பொங்கல் விழாக் கூட்டம்.

பட்டுக்கோட்டையில் 14-1-46ல் தோழர் எஸ். பாப்பையன் தலைமையில் நடந்த கலைமகள், வாசகசாலை அங்கத்தினர் கூட்டம்.

o o

31-12-45ல் சன்னாசி நல்லூரில் இளந்தமிழர் இயக்கத்தின் ஆதரவில் தோழர் இராமலிங்கம் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

13-1-46ல் மேலத்திருப்பந்துருத்தியில் நடந்த திராவிடர் கழக இரண்டாவது ஆண்டு விழா.

ஆகிய இந்தக்கூட்டங்களில் கருணை காட்டவேண்டுமென தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பேரளம் பஞ்சாயத்து போர்டு துணை தலைவர் தோழர் என். மகாதேவன், கிருஷ்ணன் பாகவதர் விடுதலை முயற்சிக் கமிட்டியில் ஒரு அங்கத்தினராக இருக்க இசைந்துள்ளார்.

## அறிவிப்பு

சில எதிர்பாரா காரணங்களினால் இந்தவார "ஜஸ்டிசைட்" வெளிவரவில்லை. அடுத்தவாரம் முதற்கொண்டு தொடர்ந்து வெளிவரும். ஆ-ர்.

## இயக்கச் செய்திகள்

8-1-46ல் நாத்தையங்கார் பேட்டை திராவிட வாலிபர் கழக கூட்டம் தோழர் பி. வி. பி. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அலகண்ணன், சுப்பிரமணியம், எம். எஸ். என். ராஜன், ஆபோத்தி முதலியோர் பேசினார்கள்.

o o

5-1-46ல் வழுதியூரில் தோழர் டி. பி. வேதாச்சலம் தலைமையில் நடந்த திராவிட வாலிபர் கழக திறப்புவிழாவில் தோழர்கள் கே. நல்லதம்பி, எஸ். எஸ். மணி, தைரியம் ஆகியோர் பேசினார்கள்.

o o

11-1-46ல் சின்னபுலியூரில் தோழர் ஜெகதீஸ் கவுண்டர் தலைமையில் நடந்த திராவிடர் வாலிபர் சங்க திறப்புவிழாவில் தோழர் சத்தியநாதன் சொற்பொழிவாற்றினார்.

o o

நாகைமணி பகுத்தறிவு கழக அங்கத்தினர்களின் கூட்டம் 12-1-46ல் தோழர் எ. கோவிந்தசாமி தலைமையில் கூடி தோழர் சந்தானத்தை தலைவராக கொண்ட நிர்வாக கமிட்டியையும் தேர்ந்தெடுத்தது.

o o

மழுசாபுரம் திராவிட இளைஞர் கழக அங்கத்தினர் கூட்டம் 13-1-46ல் தோழர் கே. எம். பி. ரெங்கராசு தலைமையில் நடைபெற்று புதிய ஆண்டிற்கு தோழர் ம. ரா. மாடசாமியை தலைவராகக் கொண்ட நிர்வாக குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

23-12-45ல் சென்னை சவுந்திரபாண்டியன் வாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் முருகப்பன் தலைமையில் நடந்தது. தோழர்கள் என். எம். சுப்பிரமணியம், பி. எ. கே. பழனிச்சாமி, என். வி. நடராசன், எஸ். ஆர். சாண்டோ, ஆகியவர்கள் "சுயமரியாதை இயக்கமும்—பெரியாரின் சேவையும்" என்பதுபற்றி பேசினார்கள்.

o o

30-12-45ல் சென்னை நகர 1-வது வட்டத் திராவிடர் கழகம் ஆதரவில் எம். கே. அண்ணாமலை துவரைக்களத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. சின்னப்பன் தலைமையில் தோழர்கள் என். நஞ்சுண்டன், பழனிச்சாமி, என். எம். சுப்பிரமணியம், எ. கே. டி. சுப்பிரமணியம், என். ஜீவரத்தினம் ஆகியோர் பேசினார்கள்.

o o

16-1-46ல் தூத்துக்குடி பெரியார் ஈ. வெ. ரா. இளைஞர் கழகத்தில் மேற்படி கழக உபதலைவர் பாட்டி இயற்கையெய்தினது குறித்து, சு. முத்துவேல் தலைமையில் நடந்த கூட்டத்தில் அன்னார் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## திராவிடர் கழகங்கள்

30-12-45ல் நாகர்கோயில் நாஞ்சில் திராவிட கழக சார்பில் தோழர் கே. மதியழகன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் கோவிந்தராசு, கே. மனோகரன், பி. இளஞ்சொல் முதலியோர் பேசினார்கள்.

7-1-46ல் விருதுநகர் திராவிடர் கழக ஆதரவில் கே. முருகையா தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஆர். ஜெகதீச பாண்டியன், ஆர். பாஸ்கர், எ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் பேசினர்.

ஆலத்தம்படி திராவிட கழகத்தின் ஆதரவில் 7-1-46ல் தோழர் காளியப்பன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் திராவிடமணி, வீரமணி, தொழிலாளர் மித்திரன் ஆசிரியர் கல்யாணசுந்திரம், கருணாநந்தம், செங்குட்டுவன் ஆகியோர் பேசினர்.

பெரிய காஞ்சீவரம் திராவிட கழக பொதுக்கூட்டம் 28-12-45ல் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் குப்புசாமியும் பல மாணவத்தோழர்களும் பேசினர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திராவிடநாட்டுச் செய்திகள்

அறந்தாங்கி தாலூகா மருத்துவர் குலக்கூட்டம் 5-11-45ல் தோழர் க. முனுசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் வெ. நடேசன் சொற்பொழிவாற்றினார்.

அறந்தாங்கிதாலூகா சலவைத் தொழிலாளர் சங்கத்தின் கூட்டம் 6-11-45ல் தோழர் சி. மருதமுத்து தலைமையில் நடைபெற்றது. மேளக்காரர்களுக்குத் தொழில் நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற தீர்மானம் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டது.

திருவானைக்காவல் சீனிவாச புரத்தில் 18-11-45ல் தோழர் டி. பி. எம். அய்யலு செட்டியார் தலைமையில் சென்னை மாகாண வேணுகுல மத்ய சபை திறப்புவிழா நடைபெற்றது.

கீரம்பூர் டாக்டர் அம்பேத்கார் இளைஞர் கழக சார்பில் 7-12-45ல் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் இராமசாமி பி. எ., தலைமையில் தோழர்கள் நல்ல செல்வம், வீரப்பன் ஆகியோர் பேசிய பின் புதிதாக கட்டப்படும் வாசகசாலைக்குப் "பெரியார் வாசகசாலை" என்று பெயரிடவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

கிச்சிபாளையம் 4-12-45 காலை தோழர் மு. துரைசாமி ஆச்சாரி தலைமையில் விஸ்வகர்ம கூட்டம் நடைபெற்றது.

தேனி 12-12-45ல் தோழர் எ. கே. அழகராஜா தலைமையில் வர்த்தக குமாஸ்தாக்கள் சங்க 2-வது ஆண்டு விழா நடைபெற்றது.

கும்பகோணம் துவரங்குரிச்சி இளைஞர் கழக சார்பில் 8-12-45 மாலை தோழர் வித்வான் மு. அரசன் கண்ணனார் B. O. L. தலைமையில் தோழர் வித்வான் கோ. சி. பெரியசாமிப்புலவர் தமிழின் தொன்மை என்பதுபற்றி பேசினார், கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை வேண்டுகோள் தீர்மானத்தை ஆதரித்து தோழர்கள் டி. என். ராமசாமி, வி. சின்னதம்பி, எஸ். கே. சாமி, எஸ், குஞ்சிதம் ஆகியோர் பேசினர், சக்ரபாணி நன்றிகூறினார்.

சுவாமிமலை 29-11-45ல் இளைஞர் இலவச வாசகசாலை அங்கத்தினர் கூட்டம் தோழர் சா. சிங்காரவேலு தலைமையில் நடைபெற்று பல தோழர்கள் பேசினார்கள்.

குற்றாலம் [illegible] தஞ்சை ஜில்லா இசைவேளாளர் இளைஞர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் 9-12-45ல் நடைபெற்று சமூக முன்னேற்றத்தைக்குறித்து பத்துபேர் கொண்ட பிரச்சாரக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர் ஜி. ராமய்யா தலைமையில் பிரச்சாரத் துவக்கக் கூட்டம் நடைபெற்றது.

வேலூர் பெருமுகை கிராமத்தில் 13-12-45 அன்று தோழர் துரைசாமி தலைமையில் நடைபெற்ற பொதுநெறிக் கழகக் கூட்டத்தில் கதிர்வேல், நாராயணசாமி, சுப்ரமணியம், முருகானந்தா, கே. கே. சுப்ரமண்யம் ஆகியோர் தமிழர் நிலைபற்றிப் பேசினர்.

குற்றாலம் 12-12-45ல் தஞ்சை ஜில்லா இசை வேளாளர் ஜில்லா கமிட்டிக் கூட்டம் தோழர் குப்பசாமி பிள்ளை தலைமையில் நடைபெற்று தோழர்கள் குப்புசாமி பிள்ளை, ரசமாணிக்கம் பிள்ளை, சுப்ரமணிய பிள்ளை, லெட்சப்பா, சந்தானம் ஆகியோர் முறையே தலைவர், உபதலைவர், பொருளாளர், செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கட்டளை தேவேந்திரகுல வாலிபர் சங்கக். கூட்டம் 16-12-45ல் தோழர் எஸ். ராசு தலைமையில் நடைபெற்று தோழர்கள் நடேசன், வீரப்பன், பெரியசாமி, மருதமுத்து ஆகியோர் பேசினர்.

மாயவரம் இசை வேளாளர் சங்கத் திறப்புவிழா 4-12-45ல் தோழர் கோவிந்தராசுப் பிள்ளை தலைமையில் நடைபெற்று தோழர்கள் முத்துவேலன், ராமமூர்த்தி, குற்றாலம் ராமய்யா ஆகியோர் பேசினார்கள்.

அருப்புக்கோட்டை 'இளைஞர் விளையாட்டுக்கோஷ்டி மதுரை' நிர்வாகிகள் தேர்தல் 17-12-45ல் நடைபெற்றது.

இலங்கை செயின்ட் மைக்கல் பாடசாலையில் ஆதிதிராவிட மகாஜன சங்க தொண்டர்படைக் கிளையின் சார்பில் 2-12-45 இரவு தோழர் ஈ.சுப்பிரமணியம் அவர்கட்கு ஒரு பிரிவு உபசாரக்கூட்டம் நடைபெற்றது. பலர் பேசினர்.

தஞ்சை கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் பழைய மாணவர்கள் கூட்டம் 14-12-45ல் தோழர் எஸ். கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்று ஹைஸ்கூலில் நடந்த மறியல் காரணமாக நடந்து வரும் பிரச்சாரத்தின் உண்மையை விளக்க தோழர்கள் கோவிந்தசாமியைத் தலைவராகவும், துரை சுந்தரேசனை அமைச்சராகவும் கொண்ட ஒரு கமிட்டி நிறுவப்பட்டது.

ஸ. ஜீ. பம்பாய் சக்தி கழக கூட்டம் எஸ். லிங்கம் தலைமையில் நடந்தது. பலர் சொற்பொழிவாற்றினர். [illegible] அவர்களை செயலாளராகக் கொண்டு ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்பட்டதின் நினைவாக ரூ. 1 'குடி அரசு'க்கு அனுப்பப்பட்டது.

கரூர் தையல் தொழிலாளர் சங்கக் கூட்டம் 18-12-45ல் தோழர் ராஜு செவுடு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு, பாகிஸ்தான் டீ ஷோப் 1-1-46ல் திறக்கப்பட்டதின் அறிகுறியாக 'குடி அரசு'க்கு ரூ. 2 நன்கொடை அனுப்பப்பட்டது.

4-1-46ல் திருச்சங்கோடு முஸ்லிம் லீகில் வெற்றி விழா ஜனாப் எஸ். கே. ஸையத் மதார் சாகிப் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். கே. அலிகான், எஸ். வி. வரதராஜலு முதலியோர் பேசினார்கள்.

காட்டூர் மருத்துவர் சங்க முதலாண்டு விழா டாக்டர். ஆர். விசயராகவன் தலைமையில் 3-1-46ல் நடைபெற்றது. தோழர் கே. ராசு வரவேற்புரை வாசித்தார். தோழர்கள் எஸ். எஸ். பாலசுப்ரமண்யம், வேலாயுதன் முறையே பெரியார் ஈ. வெ. ரா., பண்டிட் ஆனந்தம் இவர்கள் படத்தைத் திறந்துவைத்தார்கள். மற்றும் பல தோழர்கள் பேசியபின் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆண்டு விழாவின் அறிகுறியாக குடி அரசுக்கு ரூ. 1 அனுப்பப்பட்டது.

திருச்சி மருத்துவர் சங்க தொடக்க விழா 3-1-46ல் நடைபெற்றது. தோ டி. பி. வேதாசலம், டி. பி. ஆர். ராசன் மற்றும் பலர் பேசினர். சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பத்தூரில் பெரியார் ஈ. வெ. ரா. பார்க்கில் 2-1-46ல் டிப்டி கலெக்டர் தோழர் பவானி சங்கர முதலியார் அவர்களால் தண்ணீர் குழாய் திறந்து வைக்கப்பட்டது.

6-1-46ல் வ. ஆ. திருப்பத்தூர் வர்த்தக தொழிலாளர் சங்கம் டி. எம். பொன்னுசாமி அவர்கள் தலைமையில் நிறுவப்பட்டது.

5-1-46ல் தோழர் துரைசாமி தலைமையில் நடந்த நாகை மருத்துவர் கூட்டத்தில் அரசாங்க உத்தரவுக்கிணங்க தங்கள் கடைகளுக்கு சனிக்கிழமை விடுமுறை விடுவதென முடிவு செய்யப்பட்டது.

தில்லையாடி மருத்துவர் சங்கக் கூட்டம் தோழர் நடேசன் தலைமையில் நடைபெற்றது.

சேலம் ஜில்லா மருத்துவர் இரண்டாவது ஆண்டுவிழா ராவ்பகதூர் துரைசாமிபிள்ளை தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தேவநேயப்பாவாணர், எஸ். காந்தம் அம்மையார் M.Sc., L.T., என். சந்திரவடிவேல் எம். ஏ., எல். டி., எஸ். கே. சடகோபன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நீடாமங்கலம் வர்த்தக காரியஸ்தர்கள் உறுப்பினர்கூட்டம் 3-1-46ல் நடைபெற்று தோழர் பி. நடேசன் அவர்களை செயலாளராகக்கொண்டு புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. 1-1-46ல் சர்க்காரால் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கும் சிப்பந்திகள் சட்டத்தை பஞ்சாயத்து வட்டாரங்களுக்கும் அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென கேட்டுக் கொள்ளுகிறது.

குளித்தலை தாலூகா தாழ்த்தப்பட்டோர் சம்மேளன முதலாவது மாநாடு 30-12-45ல் தோழர் எம். சிங்காரம் தலைமையில் நடைபெற்றது. தோழர் வி. எம். பழனிவேல் அம்பேத்கார் படத்தை திறந்துவைத்தார். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் கே. காத்தமுத்து வரவேற்புரை ஆற்றினார். மாநாட்டின் அறிகுறியாக 'குடி அரசு'க்கு 2-ரூபாய் நன்கொடை அனுப்பப்பட்டது.

திம்மாச்சிபுரம் அண்டு கே. பேட்டை தாழ்த்தப்பட்டோர் சம்மேளன கூட்டம் கே. வி. கோபால் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் பேசினர்.

6-1-46ல் திருநெல்வேலி ஜில்லா தாழ்த்தப்பட்டோர் சம்மேளன ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

1-1-46ல் திருத்துறை பூண்டியில் 'தாலூகா ஜவுளி வர்த்தகர்கள் சங்கம்' ஏற்படுத்தப்பட்டு தோழர்கள் டி. எஸ். சண்முகம்பிள்ளை, வி. பக்கிரிசாமி நாயுடு இவர்களை செயலாளராக கொண்ட நிர்வாக குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஈரோடு மருத்துவர் சங்கத்தில் இனி சனிக்கிழமைதோரும் கடை அடைப்பதென முடிவு செய்யப்பட்டது.

---

முகவரி:

ஏ. சித்தையன்,
வாசகசாலைத்தெரு,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

## ஜின்னா 70-வது ஆண்டு பிறந்தநின விழா

25-12-44ல் முகம்மது பந்தர், கண்டியூர், நதிக்கரை முஸ்லிம்லீக் ஆதரவில் தோழர் பு. அக்பர்பாஷா தலைமையில் ஜின்னா பிறந்தநாள் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. பெரியகுளம் ரஹ்மான் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

27-12-45 செங்கம் முஸ்லிம்லீக் சார்பில் ஜின்னா பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. ஜனாப் மௌலானா மௌல்வி முஹம்மத் கவுஸ் சாஹேப் காஜி பாவிலே தெவ்பந்தி கொடியேற்றுவிழா வாற்றினார். ஜனாப் மௌல்வி அப்துல் கரீம்சாயப் சொற்பொழிவாற்றினார்.

25-12-45ல் சேந்தமங்கலம் முன்னேற்ற முஸ்லிம் வாலிபர் சங்க சார்பில் தோழர் P. B. சையத் மைதீன் அவர்கள் தலைமையில் தோழர்கள் அப்துல் லத்தீப், கே. பழனிசாமி, சலாம், டாக்டர் கப்பூர் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

23-12-45 திருவத்திபுரம் (வ. ஆ.) முஸ்லிம்லீக் இளைஞர்கழக ஆதரவில் லீக் தலைவர் மஹம்மதலி ஜின்னா பிறந்தநாள் விழா தோழர் பட்டேல் முகம்மது உஸ்மான் சாகிப் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பலர் விளக்கமாகப் பேசினார்கள்.

1-1-45 சோழபுரம் பிரைமெரி முஸ்லிம்லீக் ஆதரவில் தோழர் கே. ஜே. முகம்மது ஹுசேன் தலைமையில் தோழர்கள் ஏ. எம். யூசப், அப்துல் அஜீஸ், மஹாலிங்கம் ஆகியோர் ஜின்னாவின் சேவைபற்றிப் பேசினார்கள்.

கோட்டோறு முஸ்லிம் மாணவர் மன்ற சார்பில் 29-12-45ல் ஆலி ஜனாப் ஏ. ஏ ரஜாக் எம். ஏ., எல்எல். பி., தலைமையில் முன்னேற்றம் ஆசிரியர் தோழர் அபுல்ஹசன் ஷாதலி, மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

---

## "நாதாஸ்துக்கு" தாக்குதல்

திருவத்திபுரம் திராவிடர் கழக பொதுக்கூட்டம் தோழர் ப. அப்துல் ரஹீம் தலைமையில் 31-12-45ல் நடைபெற்றது. தோழர்கள் சி. வே. சுப்பாராயன், வித்வான் க. கோவிந்தனார், சனார்த்தனம் மற்றும் பலர் 30-12-45ல் நடந்த ராஜாஜி ஆதரிப்பு மாநாட்டில் பேசிய அண்ணாமலைப் பிள்ளை முதலியவர்கள் பேச்சுக்கு பதிலளித்து சொற்பொழிவாற்றினார்கள்.

8-1-46ல் சீர்காழி திராவிட இளைஞர்கள் சார்பில் தோழர் எஸ். என். சம்பந்தம் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் சடகோபன், ஜனார்த்தனம் பேசினார்கள்.

## மறைவு

இந்தி எதிர்ப்பில் மும்முறை சிறை சென்ற நாகை தோழர் கே. எஸ். மணி அவர்களின் தாயார் பாக்கியத்தம்மாள் 26-12-45 காலை நஞ்சுண்டபுரத்தில் இயற்கை யெய்தினார்.

திருவிளிச்சிபட்டியில் 2-11-45ல் தோழர் அருந்தமிழ்த்தோழன் தாயார் மீனாட்சியம்மாள் இயற்கையெய்தினார்.

திருவையாற்றுக்கடுத்த மில்கேல்பட்டி திராவிட இயக்கத் தோழர் என். கருப்பையாவின் தாயார் சென்ற திங்கள் இயற்கையெய்தினார்.

குடந்தை நமதியக்கத் தோழர் எஸ். மாரிமுத்து அவர்களின் தந்தை சாமிநாத படையாச்சியார் 13-12-45ல் இயற்கையெய்தினார்.

பாபநாசம் மருத்துவகுல சங்க காரியதரிசி தோழர் வி. அப்பாசாமி 15-12-45 தேதி இயற்கையெய்தினார்.

திருச்சி பலூர் மருதை அங்காயர் பாட்டி செ. சிலம்பாயி அம்மாள் 9-12-45ல் இயற்கையெய்திய புரோகித மற்ற இறுதிக்கடனின் நினைவாக குடி அரசு, திராவிடநாடு பத்திரிகைகட்கு முறையே 1 ரூ. தரப்பட்டது.

பொள்ளாச்சி திராவிடர் கழகத்தலைவரும் நமது இயக்கத்தில் தீவிர பற்றுள்ளவருமான தோழர் பி. கே. கிருஷ்ணசாமி பிள்ளை மனைவி சுப்பம்மாள் 3-12-45 திங்கட்கிழமை இயற்கை யெய்தினார்.

காரைக்கால் 'தொண்டன்' ஆசிரியர் தோழர் சோ. சொக்கலிங்கம் 1-1-46ல் இயற்கை யெய்தினார்.

நமது இயக்கத் தோழர் நாகை இராமச்சந்திரன் சகோதரி தோழர் தங்கபாப்பு 27-12-45ல் திருத்துறைப்பூண்டியில் இயற்கை யெய்தினார்.

திருச்சி திராவிடர் இளைஞர் கழகச் செயலாளர் தோழர் வை. இராமச்சந்திரன் பெண் மகவு இயற்கை யெய்தியது.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.